**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 96/2021</u>**
**<u>நாள் 01/02/2025 சனிக்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – மகேஷ் | த/பெயர் – முனுசாமி |
| வயது – 38 | தொழில் – |
| விலாசம் – பரணம்பேடு கிராமம், பொன்னேரி | |

**முதல் விசாரணை–**

நான் இந்த வழக்கின் வாதியாவேன். நான் இந்த வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது வழக்கிற்கு ஆதரவாக என்னுடைய நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக வா.த.சா ஆ 1 முதல் வா.த.சா ஆ 17 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. (1). வாதி பெயரில் உள்ள உயில் ஆவணம் அசல் **வா.த.சா ஆ 1** ஆகவும்,

(2). 19.06.2009 தேதியிட்ட முனியம்மாள் பட்டா அசல் **வா.த.சா ஆ 2** ஆகவும்,

(3). 18.01.2010 தேதியிட்ட முனியம்மாளின் இபி கார்டின் அசல் **வா.த.சா ஆ 3** ஆகவும்,

(4). 04.03.2000 தேதியிட்ட வீட்டுவரி ரசீது முனியம்மாளின் பெயரில் உள்ள அசல் **வா.த.சா ஆ 4** ஆகவும்,

(5). 01.02.2008 தேதியிட்ட வீட்டுவரி ரசீது முனியம்மாளின் பெயரில் உள்ள அசல் **வா.த.சா ஆ** 5 ஆகவும்,

(6). 13.11.2008 தேதியிட்ட வீட்டுவரி ரசீது முனியம்மாளின் பெயரில் உள்ள அசல் **வா.த.சா ஆ 6** ஆகவும்,

(7). 19.01.2013 தேதியிட்ட வீட்டுவரி ரசீது முனியம்மாளின் பெயரில் உள்ள அசல் **வா.த.சா ஆ 7** ஆகவும்,

(8). 19.01.2013 தேதியிட்ட வீட்டுவரி ரசீது முனியம்மாளின் பெயரில் உள்ள அசல் **வா.த,சா ஆ 8** ஆகவும்,

(9). 03.02.2014 தேதியிட்ட வீட்டுவரி ரசீது 2வது வாதியின் பெயரில் உள்ள அசல் **வா.த.சா ஆ 9** ஆகவும்,

(10). 02.02.2015 தேதியிட்ட வீட்டுவரி ரசீது 2வது வாதியின் பெயரில் உள்ள அசல் **வா.த,சா ஆ 10** ஆகவும்,

(11). 24.02.2015 தேதியிட்ட வீட்டுவரி ரசீது முனியம்மாளின் பெயரில் உள்ள அசல் **வா.த.சா ஆ 11** ஆகவும்,

(12). 18.02.2018 தேதியிட்ட வீட்டுவரி ரசீது முனியம்மாளின் பெயரில் உள்ள அசல் **வா.த.சா ஆ 12** ஆகவும்,

(13). 18.02.2017 தேதியிட்ட வீட்டுவரி ரசீது 2வது வாதியின் பெயரில் உள்ள அசல் **வா.த.சா ஆ 13** ஆகவும்,

(14). 19.08.2020 தேதியிட்ட இறப்பு சான்றிதழ் முனியம்மாள் கணினி நகல் **வா.த.சா ஆ 14** ஆகவும்,

(15). 09.06.2021 தேதியிட்ட 1வது வாதி சி.எஸ்.ஆர் நகல் **வா.த.சா ஆ 15** ஆகவும்,

(16). 1வது வாதி ஆதார் அட்டை நகல் **வா.த.சா ஆ 16** ஆகவும்,

(17). 2வது வாதி ஆதார் அட்டை நகல் **வா.த.சா ஆ 17** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணைக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**